மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் / மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள், சென்னை–05.
முன்னிலை திரு.கு.முருகன், பி.ஏ.,

செ.மு.ந.க.எண். 2757/நிர்.2/2021 நாள். 07.04.2021.

பொருள்: பணியமைப்பு – மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், சென்னை–5 – கோயம்புத்தூர் மாவட்டம், பார்வையற்றோருக்கான அரசு ஆரம்ப பள்ளியில் (மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் – மாற்றுப்பணி ) பணிபுரியும் திரு. பி. பிரபாகரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்து 29.10.2015 மு.ப. முதல் பணிவரன்முறை முடித்தும் மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் செ.மு.ந.க.எண். 2386/நிர்–2/2010, நாள் : 13.10.2015
2. அரசாணை (நிலை) எண்.235, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) த்துறை நாள்: 26.09.2013
3. அரசாணை எண்.100 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் : 01.08.2018.

---------

பார்வை 1ல் கண்ட செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. பி. பிரபாகரன் என்பவருக்கு, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகளுக்கான விதிகள் பொது விதி 10 (அ) (1) –ன் கீழ் தற்காலிக அடிப்படையில் ரூ. 5200 –20200 தர ஊதியம் ரூ. 2400/– என்ற ஊதிய விகிதத்தில் பணிநியமனம் செய்யப்பட்டு அன்னார் 29.10.2015 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 3ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர் பதவிகளுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் இசைவு தேவை இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, தற்காலிக பணியமைப்பு விதிகளின்படி தமிழ்நாடு அரசு ஊழியர்களின் (வரையறுக்கப்பட்ட பணிகள் ) விதி 2016–ன் பிரிவு 28(1) –ன்படி தனியர் பணியேற்ற நாளான 29.10.2015 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும் திரு. பி. பிரபாகரன், இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்த நாள் முதல் தொடர்ந்து மூன்று ஆண்டு பணியில் இரண்டாண்டு காலங்கள் தகுதிகாண் பருவத்தில் இருப்பார்.

தகுதிகாண்பருவக் காலத்தில் மேற்படி தனியர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

- தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு
- பவானி சாகர் அடிப்படை பயிற்சி

வரையறுக்கப்பட்ட மேற்படி தேர்வுகளை பணியில் சேர்ந்த நாள் முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் இதே காரணத்திற்காக எவ்வித முன்னறிவிப்புமின்றி தனியர் பணியிலிருந்து பதவியிறக்கம் செய்யப்படுவார் எனவும் ஆணையிடப்படுகிறது.

7/4/2021

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் (மு.கூ.பொ)

7/4/2021

இணைப்பு :பணிப்பதிவேடு

பெறுநர்

திரு. பி. பிரபாகரன்,
இளநிலை உதவியாளர், (மாற்றுப்பணி )
பார்வையற்றோருக்கான அரசு ஆரம்ப பள்ளி,
தொண்டாமுத்தூர் (வழி)
கோயம்புத்தூர் .

நகல்

1.தலைமை ஆசிரியர்,
பார்வையற்றோருக்கான அரசு ஆரம்ப பள்ளி,
தொண்டாமுத்தூர் (வழி)
கோயம்புத்தூர் .

2.மாவட்ட /சார்நிலை கருவூல அலுவலர்,

3. அரசு செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

4 இ.கோ.